DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.29/2024**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கண்ணய்யா | Caste: | |
| Father's/Husband Name: | கிழவன் | Calling: | விவசாயம் |
| Village: | மாரந்தை | Religion: | |
| Taluk: | கடலாடி | Age: | 53 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 23.02.2026

( எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தாலுகா மாரந்தை கிராமத்தில் வசித்து வருகிறேன். சாட்சிகள் பாலமுருகன், கருமலையான் மகன் மலைமுருகன், முத்துசெல்வம் மகன் மலைமுருகன் ஆகியோர்களை தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் பக்கத்து ஊர்க்காரர்கள். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரிகள் மூவரும் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் வகுப்பை சேர்ந்தவர்கள். எதிரிகளுக்கு நான் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்பது தெரியும். கடந்த 27.05.2024 ம் தேதி கடலாடி தேவர் மகாலில் கடலாடி திமுக ஒன்றிய செயலாளர் மாயகிருஷ்ணன் வீட்டு காது குத்துவிற்கு நான், பாலமுருகன், மலைமுருகன் மற்றும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சென்றிருந்தோம். அப்போது மகாலில் சாப்பிடும் இடத்தில் பிரச்சனை நடந்துகொண்டிருந்தது. நான் விலக்கிவிடுவதற்காக சென்றேன்.

C MOHAN RAM — Digitally signed by C MOHAN RAM Date: 2026.02.23 15:58:37 +0530

அப்போது யாரோ என் முதுகில் அடித்தவிட்டார்கள். அதுசம்பந்தமாக கடலாடி காவல்நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றேன். அங்கிருந்த காவலர்கள் என்னிடமும், பாலமுருகனிடமும் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1.** புகார் மனுவில் அறிவேன் சாட்சியென உள்ள கையெழுத்து பாலமுருகனுடையது. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 27.05.2024ம் தேதி காலை புனவாசல் கிராமத்தை சேர்ந்த மாயகிருஷ்ணன் அவர்களின் காதணி விழா கடலாடியில் உள்ள தேவர் மகாலில் நடைபெற்றது என்றும் அதில் கலந்துகொள்வதற்காக நானும் பாலமுருகன், மலைமுருகன் ஆகியோர்கள் சென்றோம் என்றும் காதணி விழா முடிந்ததும் மண்டபத்தில் சாப்பிட்டு கொண்டிருந்தோம் என்றும் அப்போது புனவாசல் கிராமத்தை சேர்ந்த திருநாவுக்கரசு, திருச்செல்வம் என்ற திருச்செல்வமுருகன், மணிகண்டன் ஆகியோர்கள் சேர்ந்து சாப்பாடு பரிமாறி கொண்டிருந்த சமையல் மாஸ்டரான சாத்தன்குடி கிராமத்தை சேர்ந்த லெட்சுமணன் என்பவரிடம் வாக்குவாதம் செய்து எதிரிகள் மூவரும் லெட்சுமணனை அடித்துவிட்டார்கள் என்றும் அங்கிருந்தவர்கள் சத்தம் போட்டவுடன் எதிரிகள் மூவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும் பின்பு நாங்கள்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:58:42 +0530

சாப்பிட்டுவிட்டு ஊருக்கு மாலை 3.30 மணியளவில் நான், மலைமுருகன், பாலமுருகன் ஆகியோர் ஒரே பைக்கில் புனவாசல் கொட்டகையில் உள்ள பூட்டு திருக்கண்ணன் என்பவர் வீட்டருகே சென்றுகொண்டிருக்கும்போது எதிரிகள் திருநாவுக்கரசு, திருச்செல்வம், மணிகண்டன் நாங்கள் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரிந்தும் வழிமறித்து எங்கள் சாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசி இங்க எதுக்குடா வர்றீங்க என்று மூவரும் சேர்ந்து கையாலும், காலாலும் என் உடம்பு முழுவதும் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும் எதிரிகள் மூவரும் தாங்கள் வைத்திருந்த அருவாளை எடுத்து காண்பித்து இனிமேல் இந்த வழியே வந்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும் இதுசம்பந்தமாக அந்த ஊர் பெரியவர்களிடம் சொல்லிவிட்டு கடலாடி காவல்நிலையம் வந்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன் என்றும், எனக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லாததால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை என்றும் கடநத் 27.05.2024 ம் தேதி முதுகுளத்தூர் டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது பக்கத்து ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களோடு சமாதானம் செய்துகொண்டு அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:58:45 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:58:50 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)